## வடக்கு மாகாண சபை – 2023

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வடக்கு மாகாண சபையின் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(1) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(2) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் உப பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பொழிப்பு அறிக்கை 15 !iy 2024 ஆந் திகதி வழங்கப்பட்டதுடன் தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) ஆம் உப பிரிவின் பிரகாரம் விபரமான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையானது 19 !லை 2024 ஆந் திகதி வழங்கப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரை மற்றும் தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கும், அறிக்கையின் பிரதியானது 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாகாண சபையில் முன்வைப்பதற்காக ஆளுநருக்கும் சமர்ப்பிக்கப்படுகின்றன.

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தை தவிர்த்து வடக்கு மாகாண சபையின் நிதிக்கூற்றுக்களிலிருந்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வடக்கு மாகாண சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதி செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமைகளை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (i) | பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு 2022 இல் கட்டி கையளிக்கப்பட்ட ரூபா 116,653,375 பெறுமதியான கட்டடத் தொகுதி மாகாண நிதிய கணக்கின் சொத்துக்களிலும் திரண்ட நிதியிலும் சேர்க்கப்படவில்லை. | 2023 ஆம் ஆண்டுகளுக்கான நிதிக்கூற்றில் தவறுதலாக வெளிப்படுத்தப்படவில்லை. எனினும் 2024 ஆம் ஆண்டின் நிதிய கணக்கின் சொத்துக்களில் வெளிப்படுத்தப்படும். | உண்மை பெறுமதி கணக்குகளிற்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | மாகாண சபையின் 01 அமைச்சு மற்றும் 11 திணைக்களங்களின் 39 எண்ணிக்கையான ரூபா 203,091,050 பெறுமதியான சொத்துக்கள் குறித்த நிறுவன நிதிநிலைமைக் கூற்றுகளிற்கு கொண்டுவரப்படாததன் காரணமாக மாகாண நிதியக் கணக்கின் நிதி நிலைமைக் கூற்றில் நிதியல்லா சொத்துக்கள் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | நிதிநிலைமை கூற்றிற்கு கொண்டுவரப்படாத சொத்துக்களில் ரூபா 113,557,740 சொத்தாக்கம் செய்யப்பட்டும் மீதி சொத்தாக்கம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது | உண்மை பெறுமதி கணக்குகளிற்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (iii) | உரிமைமாற்றம் செய்யப்படாத காணிகள் மற்றும் சில சொத்துக்கள் இரண்டு தடவைகள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட 06 எண்ணிக்கையான மாகாண நிறுவனங்களின் சொத்துக்கள் ரூபா 993,930,350 கூட்டுமொத்த தொகையினால் கணக்கின் நிதியல்லா சொத்துக்கள் கூட்டிக்காட்டப்பட்டிருந்தது. | தங்களால் குறிப்பிடப்பட்ட 06 திணைக்களங்களால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | உண்மை பெறுமதி கணக்குகளிற்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (iv) | மீளாய்வாண்டில் 03 எண்ணிக்கையான மாகாண அமைச்சுக்கள் மற்றும் 05 எண்ணிக்கையான திணைக்களங்களினால் ஏல விற்பனை செய்யப்படுவதற்காக ரூபா 16,970,739 பெறுமதியான 56 எண்ணிக்கையான மோட்டார் வாகனங்கள் குறித்த நிறுவனங்களின் நிதிநிலைமைக்கூற்றிலிருந்து நீக்கப்பட்டு மாகாண திறைசேரிக்கு மாற்றப்பட்டிருந்தது. இவ் வாகனங்கள் அறிக்கையிடும் திகதி வரையும் ஏல விற்பனை இடம்பெறாத போதும் பௌதீக ரீதியாக காணப்படுகின்ற சொத்துக்களுக்கு அவற்றின் பெறுமதிகள் மாகாண நிதிநிலைமைக்கூற்றில் நடைமுறையல்லாச் சொத்துக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | ஏலவிற்பனைக்குரிய நடவடிக்கை நடைபெற்றுக் கொண்டிருந்தமையினாலும் 2023 ஆண்டு நிதிக்கூற்றுக்களில் இப் பாவனையற்ற வாகனங்களின் பெறுமதி நிதியல்லாச் சொத்தாக உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிநிலைமைக்கூற்றில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (v) | நெதர்லாந்து அரசாங்கத்தால் 04 பில்லியன் செலவில் பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலைக்கு மருத்துவ உபகரணங்கள், தளபாடங்களுடன் கட்டி | அவசர சிகிச்சை பிரிவு கடந்த ஆண்டின் அக்ரோபர் மாதம் எம்மிடம் தற்காலிகமாக கையளிக்கப்பட்டதுடன் நடப்பாண்டில் மார்ச் மாதத்திலே உத்தியோகபூர்வமாக | உண்மை பெறுமதி கணக்குகளிற்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | |
|---|---|
| கையளிக்கப்பட்ட கட்டடங்கள் உள்ளடக்கிய சொத்துக்களானவை மாகாண சுகாதார திணைக்களத்தில் நிதியல்லா சொத்துக்களில் உள்ளடக்கப்படாமையால் மாகாண நிதிய கணக்கின் சொத்துக்களில் வெளிப்படுத்தப்படவில்லை. அத்துடன் விசேட மேம்படுத்தல் அலகுக்கான தேவையான தாதியர்கள், வைத்தியர்கள் மற்றும் தொடர்புடைய ஆளணியை வைத்தியசாலைக்கு இணைத்து சுகாதார சேவையை வழங்க கடந்த 01 வருடமாக நடவடிக்கை எடுக்காது மருத்துவ உபகரணங்களின் உத்தரவாதகால நன்மையை பெற முடியாத நிலையும் மாகாணசபைக்கு ஏற்பட்டிருந்தது. | கையளிக்கப்பட்டுள்ளது. எனவே அச்சொத்துக்கள் தொடர்பான விபரம் நடப்பாண்டுக்குரியது நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஆ) கணக்காய்வு சான்றுகள் இல்லாமை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (i) | மாகாண காணி ஆணையாளர் மற்றும் தொழில்துறைத் திணைக்களங்களின் மேலதிக எரிபொருள் கொடுக்கல் வாங்கலுடன் தொடர்புடைய ரூபா. 478,554 பெறுமதியான பற்றுச்சீட்டுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் அவற்றை திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்தவோ ஏற்றுக்கொள்ளவோ முடியாதிருந்தது. | தற்போது எரிபொருள் கொடுப்பனவுகளுக்கான எரிபொருள் பற்றுச்சீட்டு இணைக்கும் நடைமுறை பின்பற்றப்பட்டு வருகிறது. | பற்றுச்சீட்டு இணைக்கும் நடைமுறை பின்பற்றப்பட வேண்டும். |
| (ii) | மன்னார் பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தினால் மண்புழு உரக் கொட்டகை, விற்பனை நிலையம் மற்றும் வலைவீடு வேலைத் திட்டங்களுக்கு ரூபா 687,142 பெறுமதியான வேலை நிறைவேற்றலுக்கான கணியச்சிட்டை மற்றும் அளவுச்சிட்டை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இனிவரும் நாட்களில் வேலைகள் முழுமையாக நிறைவேற்றப்பட்டு அளவுச்சிட்டை, கணியச்சிட்டை என்பன உரிய வகையில் கொடுப்பனவிற்காக சிபாரிசு செய்யப்பட்டு வழங்கப்பட்ட பின்னரே கொடுப்பனவு வழங்குவதற்கான | கணியச்சிட்டை மற்றும் அளவுச்சிட்டை தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும். |

நடவடிக்கைகள்
மேற்கொள்ளப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்குஇணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளக கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாகாண சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு மாகாண திறைசேரியினை உள்ளடக்கி அந்த நிறுவனங்களின் முகாமைத்துவத்தினால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் வடக்கு மாகாண சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் தொடர்பான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்கீட்டு நியங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால், மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக

இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் போன்ற காரணங்களினால் ஏற்படுகின்றது.

- வேண்டுமென்றே, விட்டுவிடுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்த்தல் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் மாகாண சபையின் உள்ளகக் கட்டுப்பாடு கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதிலும் உள்ளகக் கட்டுப்பாட்டின் விளைதிறன் தொடர்பான அபிப்பிராயத்தை வெளியிடுவதற்கு கருதவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக்கொள்கைகளின் பொருத்ததன்மை, கணக்கீடு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளை வெளிப்படுத்துதல்களின் பொருத்ததன்மை மதிப்பீடு செய்யப்பட்டன.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்கள் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டதுடன் அதற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டன என்பது, மதிப்பீடுசெய்யப்பட்டது.

எனது கணக்காய்வின் மூலம் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு காண்புகள் பிரதான உள்ளக கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக முகாமைத்துவத்திற்கு தெரியப்படுத்தப்பட்டது.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.5.1 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | தொகை | இணக்கமின்மைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | 2016 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை நியதிச்சட்டம் | | | | |
| | (i) பிரிவு 61(அ) | - | தனியார் பேருந்து, முச்சக்கரவண்டி, பாரமற்ற வாகனம், கனரக வாகன | சங்கங்களை பதிவுசெய்வதற் குரிய அடிப்படையான | வாகன உரிமையாளர்கள் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | உரிமையாளர்கள் தொடர்பாக கழகமொன்றை அமைத்துப் பதிவுசெய்ய வடக்கு மாகாண வீதிப்போக்குவரத்து அதிகாரசபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அனுமதிகளை உரிய தரப்பினரிடமிருந்து பெறுவதற்கும் அதனைத் தொடர்ந்து அவற்றினைப் பதிவு செய்தல் நடவடிக்கை மேற்கொள்ளவும் அறிவுறுத்தப் பட்டுள்ளது. | தொடர்பாக கழகமொன்றை அமைத்துப் பதிவுசெய்ய வேண்டும். |
| | (ii) பிரிவு 15 | - | வடக்கு மாகாண வீதிப்போக்குவரத்து அதிகார சபையால் பதிவு செய்து ஒழுங்குமுறைப்படுத்தப்படாத தனியார் இயந்திர பொறியியல் நிறுவனங்களிடம் இருந்து பெறப்படுகின்ற தகுதிச்சான்றிதழ்களை அடிப்படையாகக் கொண்டு வீதிப் பயணிகள் போக்குவரத்து அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தது. | பதிவுசெய்யப்பட்ட தனியார் இயந்திரபொறியியல் நிறுவனங்களிடமிருந்து மாத்திரமே தகுதிச் சான்றிதழ் பெறமுடியும் எனதீர்மானம் நிறைவேற்றப்பட்டு இது தொடர்பில் அனைத்து தனியார் பேரூந்து உரிமையாளர்கள் சங்கங்களுக்கும் பேருந்துநிலைய பொறுப்பதிகாரிகளுக்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | நியதிச்சட்டதுடன் இணங்குதல் வேண்டும். |
| (ஆ) | 2006 ஆம் ஆண்டின் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பெறுகை வழிகாட்டி | | | | |
| | (i)பிரிவு 2.11.2 | - | 06 எண்ணிக்கையான நிறுவனங்களில் பெறுகை குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்புக் குழு உறுப்பினர்களின் வரவினை உறுதிப்படுத்துவதற்குரிய தனியான வரவுப் பதிவேடு நிகழாண்டின் போது பேணப்பட்டிருக்கவில்லை. | வரவுப்பதிவேடு தற்போது பேணப்பட்டு வருகின்றது. | பெறுகை வழிகாட்டியுடன் இணங்குவதனை உறுதிப்படுத்தல் வேண்டும். |
| | (ii)பிரிவு 5.4.8 | 81,975,012 | வவுனியா மற்றும் முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் பணிமனை மற்றும் சிறுவர் பராமரிப்புத் திணைக்களத்தினால் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட 34 எண்ணிக்கையான பெறுகையின் போது உரிய | ஒப்பந்த நிறைவேற்று காலத்திற்கு மேலதிகமாக 28 நாட்கள் வரை செயல்நிறைவேற்றுப் பிணைப்பொறுப்பு பெறப்பட வேண்டுமெனவும் பொருட்களுக்கான பெறுகையின்போது | பெறுகை வழிகாட்டியுடன் இணங்குவதனை உறுதிப்படுத்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | சதவீதத்தில் செயல் நிறைவேற்றுப் பிணைப் பொறுப்பாக பெறப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்தத் தொகையின் 10% செயல்நிறைவேற்றுப் பிணைப்பொறுப்பு பெற்றுக்கொள்வதற்கும் | |
| | (iii)பிரிவு 8.9.1 (ஆ) | 33,026,498 | முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் பணிமனை மற்றும் சுதேச மருத்துவ திணைக்களத்தில் 18 எண்ணிக்கையான சமைத்த உணவு மற்றும் உலர் உணவு வழங்கல்களின் போது ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருக்காது சேவை பெறப்பட்டிருந்தது. | இனிவரும் காலங்களில் இவ்வாறான தவறுகள் இடம்பெறாதிருக்க அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | பெறுகை வழிகாட்டியுடன் இணங்குவதனை உறுதிப்படுத்தல் வேண்டும். |
| (இ) | வடக்கு மாகாணசபையின் மாகாண நிதி விதிகள் | | | | |
| | (i) இல. 107 | 17,944,996 | 02 வகை நிறுவனங்களில் 25 உறுதிச்சீட்டுக்கள் சான்றுறுதிப் படுத்தப்படாமல் பணம் செலுத்தப்பட்டுள்ளது. | குறித்த தவறுகள் எதிர் காலத்தில் இடம்பெறாதிருக்க உள்ளகக்கட்டுப்பாட்டு முறைமை மேம்படுத்தப்பட்டுள்ளது | மாகாண நிதி விதியுடன் இணங்குவதனை உறுதிப்படுத்தல் வேண்டும். |
| | (ii) இல. 109 | 1,432,934 | 04 பாடசாலைகளின் கொடுப்பனவு அனுமதி பெறப்படாது பணம் செலுத்தப்பட்டுள்ளது. | குறித்த தவறுகள் எதிர் காலத்தில் இடம்பெறாதிருக்க உள்ளகக்கட்டுப்பாட்டு முறைமை மேம்படுத்தப்பட்டுள்ளது | மாகாண நிதி விதியுடன் இணங்குவதனை உறுதிப்படுத்தல் வேண்டும். |
| | (iii) இல. 131.3 | 20,168,905 | விவசாயத் திணைக்களத்தின் வியாபார முற்பணக்கணக்கு முயற்சியில் பண்ணை முகாமையாளரினால் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் பணம் சேகரிப்பின் போது கையொப்பங்கள் இடப்படாமலும் பதவி முத்திரை பொறிக்கப்படாமலும் பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்பட்டிருந்தன. | தற்போது அனைத்து பற்றுச்சீட்டுக்களிலும் கையொப்பம் மற்றும் பதவி முத்திரை இடப்பட்டு கோவையிடப்படுகின் | மாகாண நிதி விதியுடன் இணங்குவதனை உறுதிப்படுத்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி ஒழுங்கு விதி ஒழுங்குவிதி 773(2) (ஆ) | - | இரணைமடு குளத்தில் இருந்து அகற்றப்பட்ட 22,559 கிலோகிராம் நிறையுடைய இரும்புப் பொருட்களை 2018 ஆம் ஆண்டிலிருந்து நிதி ஒழுங்கு விதிக்கு அமைய தொழிற்சாலை பொறியியலாளருக்கு வழங்குவதற்கு நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மாகாண சபைக்கு வருமானத்தினை பெற்றுத்தரும் வகையில் உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது | நிதி விதியுடன் இணங்குவதனை உறுதிப்படுத்தல் வேண்டும். |
| (உ) | அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் 30/2016 ஆம் இலக்க 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய சுற்றறிக்கை | - | வாகனங்கள் சகல எரிபொருள் பரீட்சிப்பின் பின்னரும் 12 மாத காலஅளவின் பின்னர் எரிபொருள் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தும் 33 எண்ணிக்கையான வாகனங்களுக்கு எரிபொருள் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2024ஆம் ஆண்டில் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | சுற்றறிக்கையுடன் இணங்குவதனை உறுதிப்படுத்தல் வேண்டும். |
| (எ) | நிதி அமைச்சின் 2021 திசெம்பர் 09 ஆம் திகதிய 05/2021 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கை | - | சொத்துக்கள் 05 வருடங்களுக்கு ஒரு முறை மீள் மதிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்தும் 03 நிறுவனங்களில் 05 வருடங்கள் கடந்தும் மீள விலை மதிப்பிடப்பட்டிருக்கவில்லை. | மீள் மதிப்பீடு செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையுடன் இணங்குவதனை உறுதிப்படுத்தல் வேண்டும். |
| (ஒ) | நிதி அமைச்சின் அரச நிதி சுற்றுநிருப இலக்கம் 01/2021 ஆம் திகதிய 2021 செப்தெம்பர் 29 இன் பந்தி 2.4 | 6,725,000 | விவசாயத் திணைக்களத்தின் 06 எண்ணிக்கையான சமூக அடிப்படையிலான நேரடி ஒப்பந்தங்கள் மாந்தை தெற்கு ப.நோ.கூ சங்கத்திற்கு வழங்குவதற்கு பிரதேச செயலாளரின் ஒப்புதல் பெறப்பட்டிருக்கவில்லை. | இனிவரும் காலங்களில் 03 இற்கு மேற்பட்ட ஒப்பந்த வேலைகள் குறித்த ஒரு சங்கத்திற்கு வழங்கப்படாமல் தவிர்க்கப்படும் | அரச நிதி சுற்றறிக்கையுடன் இணங்குவதனை உறுதிப்படுத்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஓ) | 29 செப்ரம்பர் 2021 திகதியிடப்பட்ட 01/2021 இலக்க நிதி அமைச்சின் சுற்றுநிருபத்தின் பிரிவு 2.4 மற்றும் 2.5 | 2,588,463 | குறித்த ஏற்பாடுகளுக்கு மாறான வகையில் 06 எண்ணிக்கையான குறித்த அதிகார வரம்புக்கு உட்பட்டிருக்காத ஒப்பந்தங்கள் ஓரே காலப்பகுதியில் வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையினால் ஒரே சமூக மட்ட அமைப்புக்கு ஒப்பந்த அளிப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | இனிவரும் காலங்களில் சுற்றறிக்கைக்கு அமைவாக ஒப்பந்த அளிப்பினை மேற்கொள்வதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது | சுற்றறிக்கையுடன் இணங்குவதனை உறுதிப்படுத்தல் வேண்டும். |
| (அஅ) | 2015 !லை 14 ஆம் திகதியிடப்பட்ட வடக்கு மாகாண நிதிச் சுற்றறிக்கை PF/06/2015 | 39,955,165 | 0.5 மில்லியனிற்கு மேற்பட்ட 15 எண்ணிக்கையான பெறுகைகளுக்கு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு உருவாக்கப்படாமல் ஆய்வுகூடத்திற்கு தேவையான பொருட்கள் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையால் பெறுகை முன்னெடுக்கப்பட்டுள்ளது. | 2024 ஆம் ஆண்டு முதல் இக்கொள்வனவானது தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை மற்றும் பெறுகைக்குழுவின் தீர்மானத்துடன் மேற்கொள்ளப்படுகின்றது. | மாகாண நிதிச் சுற்றறிக்கையுடன் இணங்குவதனை உறுதிப்படுத்தல் வேண்டும். |

## 2. நிதிமீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிககூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான மாகாணசபை நிதியத்தில் ரூபா. 3,265,159,717 மிகையொன்று காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 2,645,712,973 ஆகக் காணப்பட்டது.

## 3. நியதிச் சட்ட கணக்குகள் மற்றும் வணிக முற்பணக் கணக்குகள்

### 3.1 நியதிச் சட்ட கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (i) | கிளிநொச்சி பேரூந்து நிலைய சிற்றுண்டிச்சாலை குத்தகை ஒரு வருடத்திற்கு கோரப்பட்டு இரு வருடங்களுக்கு ஒப்பந்தமின்றி நடத்த அனுமதிக்கப்பட்டதுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை எந்தவொரு வருமானமும் வடக்கு மாகாண வீதிப்போக்குவரத்து அதிகாரசபையினால் அறவிடப்பட்டிருக்கவில்லை. | பொதுமுகாமையாளராகிய கொள்வனவுக் குழுத்தலைவரால் அவர்களது கோரிக்கை நியாயமானதென காணப்பட்டதன் அடிப்படையில் குத்தகைக்காலம் இரண்டு வருடங்களென மாற்றப்பட்டு கேள்விப் | உரிய கால வருமானம் உரிய காலத்தில் அறவிடப்பட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பத்திரங்களில் இரண்டு வருடமெனத் குறிப்பிடப்பட்டு வழங்கப்பட்டது. | |

**3.2 வணிக முற்பணக் கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (i) | அனிஞ்சயன்குள இனவிருத்தி பண்ணையில் பால்உற்பத்தி பொருட்கள் தயாரிப்பதற்காக 2013 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டு 2018 ஆம் ஆண்டளவில் மீள் மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 2,550,504 பெறுமதியான 16 எண்ணிக்கையான இயந்திரம் பொறிகள் 10 வருடங்கள் கடந்த நிலையிலும் பயன்படுத்தமுடியாத நிலையில் துருப்பிடித்து காணப்படுகின்றது. அத்துடன் ரூபா 3,000,000 பெறுமதியான கட்டடமானது 10 வருடங்களாக பயன்பாடின்றி காணப்படுகின்றது. | அனிஞ்சயன்குளம் பண்ணையில் பால் உற்பத்தி இல்லாமையினாலும் ஏனைய வளங்கள் இல்லாமையினாலும் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தினருக்கு குறிப்பிட்ட காலம் குத்தகையில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | சொத்துக்கள் உச்சளவில் பயன்படுத்தப்படல் வேண்டும். |
| (ii) | உணவு மற்றும் விவசாய அமைப்பிடமிருந்து நன்கொடையாக அரச விதை உற்பத்தி பண்ணைக்கு 126 அந்தர் TSP மானியப்பசளை ரூபா 1,386,000 பெறுமதியில் பெறப்பட்டது. மீளாய்வாண்டில் பயன்படுத்தப்பட்ட உரத்தின் பெறுமதியில் இருந்து மானியப்பசளை பெறுமதியினை கழிக்கப்பட்டமையால் பயன்படுத்திய உரத்தின் பெறுமதி குறைத்து காட்டப்பட்டதுடன் மீளாய்வாண்டில் விவசாயத் திணைக்களத்தின் வியாபார முற்பணக்கணக்கு முயற்சியின் வருமானம் ரூபா 1,386,000 இனால் அதிகரித்து காட்டப்பட்டது. | இத் தவறு 2023 ஆண்டின் இலாப சீராக்கம் கூற்று மூலம் சீர் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. | பயன்படுத்திய உரத்தின் உண்மை பெறுமதி நிதிநிலைமைக்கூற்றில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (iii) | 2021/2023 காலப்பகுதிகளில் வடக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தினால் ரூபா 440,000 பெறுமதியில் கொள்வனவு செய்யப்பட்டு அரச விதை உற்பத்தி பண்ணைக்கு வழங்கப்பட்ட 02 | போது ஏற்பட்ட தவறினை 2023 ஆண்டின் இலாப சீராக்கம் கூற்று மூலம் சீர்செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. | உண்மை கொள்வனவு பெறுமதி நிதிநிலைமைக்கூற்றில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எண்ணிக்கையான இயந்திரமும் பொறியும் கொள்வனவு செய்யப்பட்ட பெறுமதியில் காட்டப்படாது ரூபா 17,000 ஆகக் காட்டப்பட்டுள்ளமையால் விவசாயத் திணைக்களத்தின் வியாபார முற்பணக்கணக்கு முயற்சியின் இயந்திரம் பொறியின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் ரூபா 423,000 இனால் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | | |
| (iv) | விவசாயத் திணைக்களத்தின் வியாபார முயற்சிக் கணக்கில் 2013 ஆம் ஆண்டில் JPN திட்டத்தில் தானிய விதைகளை குளிரூட்டி பாதுகாப்பதற்கான குளிரூட்டி இணைந்த களஞ்சியம் ரூபா 1,335,000 பெறுமதிக்கு அமைக்கப்பட்டது. ஆயினும் அதற்குரிய பெறுமதி விவசாயத் திணைக்களத்தின் வியாபார முற்பணக்கணக்கு முயற்சியின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டில் சொத்துக்களின் பெறுமதி மீள் மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படும். | உண்மை பெறுமதி நிதிநிலைமைக்கூற்றில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (v) | மீளாய்வாண்டில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட நடைமுறைச் சொத்தில் இருப்பின் பெறுமதியானது இருப்பு பதிவேட்டின்படி ரூபா 37,352 ஆகவும் இருப்பு மதிப்பீட்டு அட்டவணையின் பிரகாரம் ரூபா 1,887,500 ஆகவும் காட்டப்பட்டமையால் இறுதி இருப்பானது ரூபா 1,850,148 இனால் அதிகரித்து காட்டப்பட்டுள்ளது. | இத்தொகை 2024ஆம் ஆண்டுக்கான இறுதிக்கணக்குகளில் சீர் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும | இருப்பின் உண்மை பெறுமதி நிதிநிலைமைக்கூற்றில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (vi) | விவசாயத் திணைக்களத்தின் வியாபார முற்பணக்கணக்கு முயற்சியின் கீழுள்ள அரச விதை உற்பத்தி பண்ணையில் காணப்படுகின்ற ரூபா.500,000 பெறுமதியான Compost grader கடந்த 2 வருடங்களாக பயன்பாடின்றிக் காணப்படுகின்றது. | சேதனைப்பசளைக்கான கேள்வி குறைவடைந்தமையினால் பாரிய அளவில் உற்பத்தியில் ஈடுபடமுடியவில்லை. எனினும் அவ்வப்போது நிலையத்திற்கு தேவையான உற்பத்தியினை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. | சொத்துக்கள் உச்சளவில் பயன்படுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (vii) | விவசாயத் திணைக்களத்தின் வியாபார முற்பணக்கணக்கு முயற்சியின் மீள் மதிப்பீடு செய்யப்படாத கட்டடங்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டதாக காட்டப்பட்டமையினால் இதற்காக இதுவரை மேற்கொள்ளப்பட்ட பெறுமானத்தேய்வு ஏற்பாடு நிதிக்கூற்றுக்களில் இருந்து அகற்றப்பட்டது. இதனால் தேறிய சொத்தின் பெறுமதி ரூபா 7,901,713 இனால் அதிகரித்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளது. | காணியினை உரிமை மாற்றம் செய்வதற்கு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | உண்மை பெறுமதி நிதிநிலைமைக்கூற்றில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.3 ஏனைய முற்பணக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 03 மாகாண நிறுவனங்களின் 21 அலுவலர்களிடமிருந்து ஓய்வு பெறல் வேலையிலிருந்து இடைநிறுத்தல் காரணமாக வழங்கப்பட்ட ரூபா 3,844,025 அரச ஊழியர் கடன் நிலுவையானது அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அறவீடு செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. | அரச ஊழியர் கடன் நிலுவையானது அறவீடு செய்யப்பட வேண்டும். |

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 அரசாங்க மானியம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| பல்வேறுபட்ட செயற்திட்டங்களினூடாக மாகாண சபைக்கு வழங்கப்பட்ட கொடைகள் மற்றும் மானியங்களில் ரூபா 3,235 மில்லியன் நிதி குறைவாக பயன்படுத்தப்பட்டிருந்தது. | | உரிய கால நிதி உரிய காலத்தில் பயன்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டில் மாகாண கல்வித் திணைக்களத்தினால் ஆண்டு 06 தொடக்கம் 11 வரையான மாணவர்களுக்கு 2023 ஆம் ஆண்டில் 2022 ஆம் ஆண்டிற்காக நடாத்தப்பட்ட இறுதித் தவணைப் பரீட்சையின் போது ரூபா.18,950,100 பணமானது மாணவர்களிடமிருந்து அறவிடப்படுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது, ரூபா 13,926,892 பெறுமதியான பணம் செலவு செய்யப்பட்டிருந்ததன் ஊடாக மேலதிகமாக ரூபா 5,023,208 ஆனது மாணவர்கள் மீது அநாவசியமாக சுமத்தப்பட்டிருந்ததுடன் மாகாணக் கல்வித் திணைக்கள வைப்பில் இடப்பட்டிருந்தது. | அடுத்த பரீட்சையின்போது மாணவர்களிடம் குறைவாகக் கட்டணம் அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது | உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (ii) | அரச அலுவலகங்களின் வருடாந்த செலாற்றுகை மதிப்பிடப்பட்டு ஆண்டு சம்பள ஏற்றங்கள் வழங்கப்பட வேண்டிய போதிலும் 12 கல்வி வலயங்களில் கடமையாற்றும் 156 அலுவலர்களுக்கு 01 இலிருந்து 25 வரையான சம்பள ஆண்டேற்றங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகத்தர்களுக்கான சம்பள ஆண்டேற்றங்கள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | ஆண்டு சம்பள ஏற்றங்கள் வழங்கப்பட நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (iii) | சேவையின் போது மாகாண கல்வித் திணைக்களத்திற்கு கீழான 02 அதிபர்கள் மரணமடைந்திருந்த போதும் அவர்களின் தனிநபர் கோவைகள் சீராக பேணப்படாமையால் 02 அலுவலர்களுக்கு மரண பணிக்கொடை உள்ளிட்ட தொடர் நன்மைகள் கிடைக்காதிருந்தது. | தற்போது ஓய்ூதிய திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. | உரிய தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (iv) | நியமனம் பெற்று 03 வருடங்களைக் கடந்திருந்த போதிலும் 10 கல்வி வலயங்களிலுள்ள 20 பாடசாலைகளில் கடமையாற்றும் 49 பணியாளர்கள் பதவியில் உறுதிப்படுத்தப்பட தொடர் நடவடிக்கை எடுக்கப்படாததுடன் | கல்வித் தகைமைகள் தொடர்பான சான்றிதழ்களை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகள் பூரணப்படுத்தப்படாமை தவிர ஏனைய உத்தியோகத்தர்களுக் | நடைமுறை விதிக்கமைய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அரச உத்தியோகத்தர் நடைமுறை விதி அத்தியாயம் VIII இற்கமைய நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கு பதவியில் உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | |
| (v) | வேலை மேற்பார்வையாளராக 2014.10.24 ஆம் திகதி நியமனம் பெற்ற கட்டடங்கள் திணைக்களத்தின் 39 உத்தியோகத்தர்களிடமும் வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் 04 உத்தியோகத்தர்களிடமும் 2015 சித்திரை மாதம் தொடக்கம் 2024 மாசி மாதம் வரை ரூபா 5,520,753 விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய கொடுப்பனவிற்காக அவர்களின் சம்பளத்தில் இருந்து அறவீடு செய்யப்பட்ட போதிலும் குறித்த உத்தியோகத்தர்களின் பெயரில் விதவைகள், அநாதைகள் ஓய்"திய இலக்கம் பதிவுசெய்யப்பட்டு குறித்த உத்தியோகத்தரின் ஓய்வூதியப் பங்களிப்பினை இனங்காணக்கூடிய வகையில் ஓய்"திய இலக்கம் குறிப்பிடப்பட்டு கொடுப்பனவு மேற்கொள்ளப்படவில்லை. | குறித்த உத்தியோகத்தருக்கு முறையான நியமனக்கடிதம் வழங்கப்பட்டதும் தங்களால் சுட்டிக்காட்டப்பட்ட உத்தியோகத்தர்களின் பெயரில் விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய இலக்கம் பதிவுசெய்யப்பட்டு குறித்த உத்தியோகத்தர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். | உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (vi) | வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் விபத்திற்குள்ளான வாகனங்கள் தொடர்பாக காப்புறுதி நிறுவனத்தினால் இழப்பீடு வழங்க முடியாது எனக் குறிப்பிடப்பட்டிருந்தபோதும் 06 வாகனங்களுக்கு ஏற்பட்ட இழப்பீடு தொடர்பாக சொத்தினை வழமையான நிலைக்குக் கொண்டு வருவதற்கு அல்லது ஈடு செய்வதற்கு 01 தொடக்கம் 13 வருட காலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமையினால் ரூபா 22,573,727 தொகை நட்டம் ஏற்பட்டுள்ளது. | விபத்துக்குள்ளான 06 வாகனங்கள் தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (vii) | வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்தின் ஆளுகைக்குட்பட்ட பருத்தித்துறை வைத்தியசாலையில் 2016 ஒக்டோபர் மாதத்தில் ரூபா 8 | பொதுமக்களின் எதிர்ப்பு காரணமாகவே குறித்த எரி!ட்டல் இயந்திரத்தின் செயற்பாடு | எரி!ட்டல் இயந்திரம் நிறுவ உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மில்லினுக்கு நிறுவப்பட்ட எரியூட்டல் இயந்திரம் போதுமான கவனத்துடனும் போதிய பாதுகாப்புடனும் உத்தரவாத காலத்துக்கு பின் ஒழுங்குமுறையாக பராமரிக்கப்படாமையால் இயங்கமுடியாத நிலையில் இருந்து தற்போது அதன் சிமிலி முற்றாக துருப்பிடித்து முழுமையாக பாவனையற்றுப் போயிருந்தது. | நிறுத்தப்பட்டிருப்பதுடன் 20 பேர்ச் காணியை கொள்வனவு செய்து தருவதற்கு பிரதேச சபை உடன்பட்டுள்ளது. | |
| (viii) | வவுனியா பொது வைத்தியசாலையில் இரண்டு தொலைத்தொடர்பு கோபுரங்களிற்கும் தனித்தனியாக உப மின்மானி பொருத்தப்பட்டுள்ளதுடன் இரு தொலைத்தொடர்பு நிறுவனங்களிடமிருந்தும் மின்சாரக்கட்டணம் உரிய காலப்பகுதியில் அறவிடப்படாததுடன் வவுனியா மாவட்ட வைத்தியசாலையினாலேயே மின்கட்டணங்கள் செலுத்தப்பட்டுள்ளது. அத்துடன் 2016 பெப்ரவரி 01 தொடக்கம் 2022 ஜனவரி 31 வரையான காலப்பகுதியில் வவுனியா மாவட்ட நோயாளர் நலன்புரிச் சங்கத்திற்கு மாற்றப்பட்டமையால் கோபுரங்களுக்கான வாடகை வருமானம் ரூபா.4,538,106 இழக்கப்பட்டுள்ளது. | இனிவரும் காலங்களில் வைத்தியசாலை நிர்வாகத்தினால் ஒப்பந்தம் மீளமைக்கப்பட்டு வருமானம் அறவிடுவதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | வருமானம் அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| | வவுனியா மாவட்ட பொதுவைத்தியசாலை வளாகத்தில் இரண்டு தனியார் வங்கிகளில் ஒரு தனியார் வங்கியிடமிருந்து மாதாந்த வாடகைப்பணம் அறவிடப்படுவதுடன் அத் தொகை மாகாண வருமானத்திற்கு மாற்றப்படாமல் நோயாளர் நலன்புரிச்சங்கக் கணக்கில் வைப்பிலிடப்படுகின்றதுடன் மற்றய தனியார் வங்கியிடமிருந்து எவ்வித வாடகைப்பணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | இதற்கான வருமானம் இனிவரும் காலங்களில் மாகாண சபைக்கு மாற்றுவதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | வருமானம் அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும |

| | | | |
|---|---|---|---|
| (ix) | முல்லைத்தீவு பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தில் கடமையாற்றும் 164 அலுவலர்களுக்கு கடந்த 21 ஆண்டுகளாக விதவைகள் அனாதைகள் ஓய்ூதிய இலக்கம் பெற்றுக்கொடுக்கப்பட்டிருக்கவில்லை. | இவர்களுக்கான முறையான நியமனக்கடிதம் கிடைக்கப்பெற்றதும் W&OP இலக்கம் பெறுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | ஓய்ூதிய இலக்கம் பெற்றுக்கொடுக்கப்பட உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (x) | மாகாண உள்ளுராட்சி திணைக்களத்தின் யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களின் உள்@ராட்சி மன்றங்களின் ஆளுகைக்குட்பட்ட விடயங்கள் தொடர்பில் இடம்பெற்ற 77 எண்ணிக்கையிலான முறைப்பாடுகள் தொடர்பில் ஆக்க" ர்வமான நடவடிக்கைகள் எவையும் நிகழாண்டில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | உள்;ராட்சித் திணைக்களத்திற்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (xi) | மாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தினால் 03 கட்டடங்கள் மற்றும் 19 காணிகள் மதிப்பீடு செய்து கணக்குகளுக்கு கொண்டுவர எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தின் 03 கட்டடங்கள் மற்றும் 19 காணிகள் மதிப்பீடு தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | கணக்குகளுக்கு கொண்டுவர உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (xii) | வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி திணைக்கள நிறைவேற்றுப் பொறியியலாளர் யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவு அலுவலக காணியின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்குகளிற்கு கொண்டுவரப்படவில்லை. | காணிகளின் பெறுமதி மதிப்பீடு தொடர்பாக தொடர்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இவ்வருட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படும் | கணக்குகளுக்கு கொண்டுவர உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (xiii) | நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் பயன்படுத்தப்பட்டுவரும் ரூபா 3,200,000 பெறுமதியான 11 வாகனங்கள் வடக்கு மாகாண பிரதம செயலாளரின் பெயருக்கு உரிமை மாற்றப்பட்டிருக்காததுடன் குறிப்பிட்ட வாகனங்களின் புத்தகமும் அறிக்கையிடும் திகதிவரை பெறப்பட்டிருக்கவில்லை. அத்துடன் | நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கான உரிமை மாற்றம் செய்யப்படாத 11 வாகனங்கள் தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பயன்பாட்டிலுள்ள வாகனங்களை அடையாளம் காணக்கூடியவாறு இலட்சனை வாகனங்களில் பொறிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (xiv) | கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தினால் பயன்படுத்தப்படுகின்ற ரூபா 6,200,000 பெறுமதியான 02 எண்ணிக்கையான வாகனங்களும் பெறுமதி மதிப்பிடப்படாத ஒரு வாகனமும் வடக்கு மாகாண பிரதம செயலாளரின் பெயருக்கு உரிமை மாற்றப்பட்டிருக்காததுடன் குறிப்பிட்ட வாகனங்களின் புத்தகமும் அறிக்கையிடும் திகதிவரை பெறப்பட்டிருக்கவில்லை. | கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்திலுள்ள வாகனங்கள் தொடர்பில் தொடர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | பிரதம செயலாளரின் பெயருக்கு உரிமை மாற்றப்பட உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (xv) | கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்திற்குச் சொந்தமான 10 எண்ணிக்கையான கட்டடங்களுக்குப் பெறுமதி மதீப்பீடு செய்யப்பட்டு நடைமுறையல்லாச் சொத்தாக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீடு செய்வதற்காக விலை மதிப்பீட்டு திணைக்களத்திற்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. விலை மதிப்பீட்டு திணைக்களத்திடமிருந்து மதிப்பீடு கிடைக்கப்பெற்றதும் சொத்தாக்கம் செய்யப்படும். | பெறுமதி மதீப்பீடு செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (xvi) | வடக்கு மாகாண சாரதி சேவை அலுவலர்களுக்கு 2017 ஆம் ஆண்டின் பின்னர் வருடாந்த இடமாற்ற கட்டளைகள் அமுலாக்கப்படாததனால் சில திணைக்களங்களில் சாரதிகள் 06 இலிருந்து 19 வருடங்கள் வரை தொடர்ச்சியாக கடமையாற்ற விடப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | இடமாற்ற கட்டளைகள் அமுலாக்கப்பட நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

**4.3 சச்சரவுத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (i) | பாடசாலை வகைப்படுத்தல் சுற்றுநிருபத்திற்கமைவாக ஆசிரியர்களுக்கான படிகளை வழங்காது 2019 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு | ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட மேலதிக படியினை அறவிடுவதற்கான நடவடிக்கை | வழங்கப்பட்ட மேலதிக படியானது மீள அறவிடப்பட உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் |

| | | | |
|---|---|---|---|
| | வரை தீவக கல்வி வலய ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 10,230,397 மேலதிக படியானது இன்றுவரை மீள அறவிடப்பட்டிருக்கவில்லை. | மேற்கொள்ளப்படுகின்றது. | வேண்டும். |
| (ii) | 2008 யூன் 26 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 13/2008 இன் பிரகாரம், மீளாய்வாண்டில் ஆளுநர் செயலகத்தில் வாகன ஓட்ட அட்டவணை, இணைப்பு 01 ஆகியன எதுவுமின்றி சாரதிகளுக்கான மேலதிக நேரக்கொடுப்பனவு மற்றும் இணைந்த படிகளாக ரூபா 1,384,407 வழங்கப்பட்டிருந்தது. | கௌரவ ஆளுநர் மற்றும் அவரது பிரத்தியேக செயலாளர்களின் பாதுகாப்பு கருதி வாகன ஓட்ட அட்டவணை காலம் காலமாக சமர்ப்பிக்கப்படுவதில்லை | சுற்றறிக்கை உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (iii) | 2018 அக்டோபர் 12 ஆந் திகதிய PS/CSA/11-18 இலக்க ஜனாதிபதி செயலக சுற்றறிக்கையின் பிரகாரம், ஆளுநருக்கான உணவு தொடர்பான படிகள் எதுவும் குறிப்பிடப்பட்டிருக்காததுடன் 2021 திசெம்பர் தொடக்கம் 2023 மே வரையான காலப்பகுதிக்கான உணவுக்காக ரூபா.4,037,299 கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | ஆளுநர் அவர்களின் பணிப்பின் பிரகாரம் ஆளுநரினால் குறிப்பிடப்பட்ட நபருக்கு கௌரவ ஆளுநர் அவர்களினால் அனுமதிக்கப்பட்ட வாக்குத்தலைப்பின் ஊடாக உணவுக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டது. | சுற்றறிக்கையின் பிரகாரம நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (iv) | ஆளுநர் செயலகத்தில் 2021 திசெம்பர் மாதம் தொடக்கம் 2023 மே வரையான காலப்பகுதியில் கூட்டிணைப்பு செயலாளர், பிரத்தியேக செயலாளர், மக்கள் தொடர்பு உத்தியோகத்தர் ஆகியோர் தமக்குரிய வாகனமாக தமது வாகனத்தை பயன்படுத்துவதாக குறிப்பிட்டு வாகனப் படியை பெற்றுக்கொண்டபோதும் சாரதிகள் தேவையற்ற 33 மாதங்களுக்கு மேலதிமாக சாரதிகளுக்கு ரூபா 1,344,644 சம்பளம் வழங்கப்பட்டதுடன் இதற்கு மேலாக சாரதிகளுக்கான மேலதிக நேரக் கொடுப்பனவு, இணைந்தபடிக் கொடுப்பனவு ஆகியனவும் வழங்கப்பட்டிருந்தது. | 2021 தொடக்கம் 2023 மே வரையான காலப்பகுதியில் கடமையாற்றிய ஆளுநர் அவர்களின் பயன்பாட்டில் இருந்த வாகனங்களின் எண்ணிக்கைக்கு ஏற்பவே சாரதிகள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். ஆளுநரின் பாதுகாப்பு காரணங்களை கருத்திற்கொண்டு சாரதிகள் நியமனங்கள் தொடர்பான விண்ணப்பங்கள் கௌரவ ஆளுநரினாலேயே பரிசீலிக்கப்பட்டு | உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கௌரவ ஆளுநர் அவர்களின் அறிவுறுத்தலின் அடிப்படையிலேயே நியமனங்கள் | |
| (v) | ஆளுநருக்கான கொழும்பு உப அலுவலக கட்டிட மாதாந்த வாடகையானது பிரதம விலை மதிப்பீட்டாளரினால் மாதாந்தம் ரூபா 100,000 என மதிப்பிடப்பட்டிருந்த போதும் இவ் மதிப்பீட்டிற்கு முரணாக மாதாந்தம் மேலதிகமாக ரூபா 80,000 விகிதம் கொடுப்பனவு செலுத்தப்பட்டமையினால் மாகாண நிதியத்திற்கு ரூபா.1,240,000 நிதி இழப்பு ஏற்பட்டிருந்தது. | பிரதான விலைமதிப்பீட்டாளரினால் மாதாந்தம் ரூபா 100,000 என மதிப்பிடப்பட்டிருந்த போதும் | உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (vi) | இரு கட்டடங்கள் ஆளுநரின் உப அலுவலக தேவைக்காக வாடகைக்கு பெறப்பட்டிருந்த காலத்தில் அதற்கு மேலதிகமாக 3½ மாத காலத்திற்காக பயன்படுத்தப்படாத முன்னைய கட்டடத்திற்கு செலுத்தப்பட்ட ரூபா. 630,000 ஆனது அவசியமற்ற செலவாகும். | பிரதம செயலாளரின் அனுமதியுடன் 3 ½ மாத காலத்திற்கு கல்கிசை அலுவலகத்திற்கு வாடகை செலுத்தப்பட்டது. | உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (vii) | ஆளுநரின் முன்னைய கொழும்பு உப அலுவலகத்தின் 2021 ஒக்டோபர் மாதத்திலிருந்து 2022 ஜனவரி 28 ஆம் திகதிவரை பயன்படுத்தப்படாத கட்டட பாதுகாப்புச் சேவைக்காக ரூபா 319,031 தொகையானது செலுத்தப்பட்டிருந்தது. | கட்டட மற்றும் பொருட்களின் பாதுகாப்பின் பொருட்டு பாதுகாப்பு சேவை பெறப்பட்டது | உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (viii) | 2021 திசெம்பர் மாதம் தொடக்கம் 2023 மே மாதம் வரையான 18 மாதங்கள் காலப்பகுதிகளில் பிரத்தியேக செயலாளர் 16 மாதங்களும், இணைப்புச் செயலாளர்கள் 04 மாதமும், ஊடாக செயலாளர் 12 மாதமும் மற்றும் பொதுசன தொடர்பு உத்தியோகத்தர் 03 மாதங்களும் நியமனம் செய்யப்படாமலும் நியமனம் செய்யப்பட்ட பதவிகளுக்குரிய உத்தியோகத்தர்கள் எரிபொருள் படிகளையும் மற்றும் வாகனப் | புதில் வழங்கப்படவில்லை. | உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

படிகளையும் பெற்றுக் கொண்டுள்ளபோதும் ஆளுநரினால் அவர்களுக்குரிய வாகனங்களை தனது தேவைக்கு பயன்படுத்தியமையால் ரூபா 640,000 மேலதிக கொடுப்பனவு கொடுக்கப்பட்டிருந்தது.

## 4.4 வெளிப்படையான ஒழுங்கீனங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | சிபார்சு |
| --- | --- | --- |
| சிறுவர்களைப் பாதுகாப்போம் வெளிநாட்டு நன்கொடையாளர் நிறுவனத்திடமிருந்து கடந்த 02 வருடங்களுக்கு முன்னர் கிளிநொச்சி தெற்கு வலயத்தால் பெறப்பட்ட ரூபா 02 மில்லியன் பெறுமதியான நகரக்கூடிய 08 உபகரணங்கள் பொருள் இருப்பு பதிவேட்டில் பதியப்படாது வருடாந்த பொருள் மெய்மையாய்வு செய்யப்படாது 2024 இல் குறித்த நன்கொடையாளருக்கு திருப்பிக் கொடுக்கப்பட்டது. | குறித்த விடயம் தொடர்பாக, மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழுவினால் இது தொடர்பான விசாரணை நடைபெற்று வருகின்றது அறிக்கை கிடைத்ததும் தொடர்நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. | உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

## 4.5 நிதிகளின் குறைந்த பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | சிபார்சு |
| --- | --- | --- |
| சர்வதேச தொழிலாளர் சம்மேளனத் திட்டத்தின் கீழ் தேசிய தொழிற்தகைமை சான்றிதழ் வழங்கல் பயிற்சி நெறிக்காக மாகாண திறைசேரியினால் 2023 ஏப்ரல் 10 ஆம் திகதி ரூபா 3,299,000 கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது. 11 மாதங்கள் கடந்த நிலையிலும் 59% ஆன ரூபா 1,950,000 பெறுமதியான நிதியானது வடக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தின் வைப்புக் கணக்கில் காணப்படுகிறது. | | உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

## 4.6 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (i) | 01 இலிருந்து 27 வருடகாலமாக வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் 35 மாகாண பாடசாலைகளில் யுத்தம், களவு போன்ற காரணங்களினால் ஏற்பட்ட ரூபா. 11,587,195 கூட்டுமொத்த இழப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணப்படியான தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 1995 தொடக்கம் இன்று வரை யுத்தம் மற்றும் களவு காரணமாக பாடசாலைகளில் ஏற்பட்ட இழப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணத்திற்கமைவாக விசாரணைக்குழு நியமிக்கப்பட்டு ஆரம்ப விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு பதிவழித்தல் தொடர்பில் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | நிதிப்பிரமாணப்படியான தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (ii) | வடக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் ஒரு வாகனமானது 2016 அக்டோபர் 13 ஆம் திகதி சாரதியின் கவனயீனத்தினால் விபத்து ஏற்பட்டது. குறிப்பிட்ட விபத்தினால் ஏற்பட்ட நட்டம் ரூபா 620,760 ஆனது சாரதியிடமிருந்தே அறவிடப்பட வேண்டும் என்று விசாரணைகளின் முடிவில் தீர்மானிக்கப்பட்டிருந்தபோதும் குறிப்பிட்ட நட்டமானது அறிக்கையிடும் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | குறித்த சாரதியால் குறித்த நட்டத்தொகையான ரூபா 620,760 செலுத்தப்படாததன் காரணமாக மாகாண சட்ட ஆலோசகருக்கு குறித்த உத்தியோகத்தருக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. | அறவிடப்பட உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

## 4.7 செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்

### 4.7.1 கைவிடப்பட்ட செயற்திட்டங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (i) | வடக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் மீளாய்வாண்டில் 03 எண்ணிக்கையான செயற்திட்டங்கள் ரூபா 22,900,000 பெறுமதியில் மதிப்பீடு | தொடர்ந்து வரும் காலங்களில் உலக வங்கி ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியின் கீழ் குளப்பராமரிப்பினை | உரிய காலத்தில் முழுமைப்படுத்தி சேவைகள் வழங்கப்பட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்டு மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 5,334,611 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தும் செயற்திட்டங்கள் கைவிடப்பட்டிருந்தது. | மேற்கொள்ள முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளும் நிலையிலுள்ளன. | |
| (ii) | பாவற்குளம் நெல் உலர்த்தும் தளம் அமைப்பதற்கு 2021 !லை 19 திகதியிலிருந்து 2021 செப்தெம்பர் 19 வரை ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு 14 மாதங்கள் கால நீடிப்புக்கள் வழங்கப்பட்டிருந்தும் வேலை நிறைவேற்றப்படாது ரூபா 605,958 செலுத்தப்பட்ட நிலையில் கைவிடப்பட்டிருந்தது. | குறித்த வேலைத்திட்டத்திற்கு காலநீடிப்பு வழங்கப்பட்டபோதும் வேலை நிறைவேற்றாமையால் அதற்கான காலதாமத்திற்கான தண்ட அறவீடு ஒப்பந்தத் தொகையில் 5% மான ரூபா 50,000 குறித்த ஒப்பந்தகாரரிடம் அறவிடப்பட்டே முடிக்கப்பட்ட வேலைக்கான கொடுப்பனவு வழங்கப்பட்டது. தற்போது பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அலுவலகம் வவுனியாவினால் மீள கடைக்கொள்ளல் முறையில் கேள்விகோரப்பட்டு ஒப்பந்தகாரர் தெரிவுசெய்யப்பட்டு ஒப்பந்தம் கைசாத்திட்டு வேலை தொடருகின்றது. | உரிய காலத்தில் முழுமைப்படுத்தி சேவைகள் வழங்கப்பட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 4.8 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 4.8.1 பராமரிப்பு மற்றும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படாமை

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபார்சுகள்** |
|---|---|---|---|
| (i) | வடக்கு மாகாணப் பாடசாலைகளில் காணப்படுகின்ற 1,316 மேசைக் கணனிகள், 101 மடிக் கணனிகள், 186 டப்கள், 91 பல்லூடக எறியிகள் மற்றும் 38 திறன் பலகைகள் | பாடசாலைகளிலுள்ள பழுதடைந்த கணனிகளை தற்போதைய வலய அணியினரும் தேசிய வன்பொருள் அணியினராலும் | திருத்தம் செய்து பயன்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பழுதடைந்திருந்தும் அவற்றை திருத்தம் செய்து பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திருத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.<br><br>Smart Board மற்றும் பல்லூடக எறியி திருத்துவதற்கு எமது வன்பொருள் அணியினருக்கு மேலதிக பயிற்சி தேவையாகவுள்ளது. கூடிய விரைவில் இப்பயிற்சியை வழங்கிய பின்னர் திருத்தங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | |
| (ii) | வடக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் 07 எண்ணிக்கையான ரூபா 5,046,000 பெறுமதியான வாகனங்கள் உரிய காலப்பகுதிகளில் பழுதுபார்க்கப்படாமையால் 02 வருடங்கள்முதல் 04 வருடங்கள் வரையான காலமாக விளைவற்றுக் காணப்படுவதோடு மூன்று விடுதிகளில் ரூபா 3,650,000 பெறுமதியான ஒரு விடுதியும் பெறுமதி மதிப்பிடப்படாத இரண்டு விடுதிகளும் உரிய காலப்பகுதிகளில் பழுதுபார்க்கப்படாமையால் 05 வருடங்கள் முதல் 15 வருடங்கள் வரையான காலமாக விளைவற்றுக் காணப்படுகின்றது. | கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் 07 எண்ணிக்கையான வாகனங்களில் 05 வாகனங்கள் (NPKB 9036 NPTH 1096 NPTV 8096 NPVH 5334 NPVH 5337) திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் இரு வாகனங்களிற்கு (NPHH 6129, NPVH 5348) நிதி மற்றும் இயந்திர பாகங்களின்மையின்மையால் திருத்தப்படாதிருந்தது. தற்போது திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>குறித்த 3 விடுதிகளும் 2025 ஆம் ஆண்டு வரவுசெலவுத்திட்டத்தில் பராமரிப்பு செலவினம் ஊடாக திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. | திருத்தம் செய்து பயன்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

**4.8.2 முறைப்படி பொறுப்பேற்கப்படாத காணிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் 06 அரச பாடசாலைகளின் உடமையான 06 எண்ணிக்கையான காணிகள் வயல்கள் தனியார் மற்றும் ஏனைய தரப்பினரால் அத்துமீறப்பட்டிருந்த போதிலும் குறித்த அரச சொத்துக்களை ஆட்சிப்படுத்துவதில் மாகாண நிர்வாகம் பொருத்தமான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. | 06 அரச பாடசாலைகளிற்கு உடமையான காணிகள் வயல்களை ஆட்சிப்படுத்தவதில் கல்வித்திணைக்களத்தினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | அரச சொத்துக்களை ஆட்சிப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

**4.9 ஆளணி நிருவாகம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (i) | வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் 31.12.2023 இல் உள்ளவாறான ஆசிரிய ஆளணியினை கணக்காய்வு செய்த போது வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் ஆசிரியவளப் பங்கீடானது அனைத்து மாணவர்களும் பயன்பெறும் வகையில் வினைத்திறனாக சமத்துவமாக பகிரப்பட்டிருக்காமையால் 13 வலயங்களில் 560 மேலதிகம், 439 பற்றாக்குறை ஏற்படும் வண்ணம் பங்கிடப்பட்டு சேவை வழங்கப்படுகின்றது. | ஆசிரிய ஆளணி இடமாற்றங்களுக்கப்பால் வெளிநாட்டு விடுமுறை, உள்நாட்டு விடுமுறை மற்றும் ஏனைய நீண்டகால விடுமுறைகள், ஓய்வு பெறுதல், பதவி வெறிதாக்கல் போன்ற காரணங்களால் தொடர்ச்சியாக மாற்றம் பெற்று வருகின்ற நிலையில் தற்போது மாகாண மட்டத்தில் நடைபெற்ற இடமாற்றங்கள் மூலம் இந்நிலைமை ஓரளவு சீர்செய்யப்பட்டுள்ளது. மேலும் தற்போது மாகாண மட்ட இடமாற்றங்களுக்கான மேன்முறையீட்டுச்சபை தீர்மானப்படி வலயங்களுக்கிடையேயான வருடாந்த ஆசிரியர் இடமாற்றம் மற்றும் சேவையின் தேவை கருதிய | ஆசிரியவளப் பங்கீடானது சமத்துவமாக பங்கிடப்பட நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | இடமாற்றம் ஆகியனவும் வலயங்களுக்குள்ளான வருடாந்த இடமாற்றங்களும் நடைபெற்று வருவதனால் இந்நிலைமை கூடியளவு சீர்செய்யப்படும். அத்துடன் க.பொ.த (உ/த) பாடங்களுக்குரிய வெற்றிடங்களுக்கு தற்போது புதிய நியமனங்களும் வழங்கப்பட்டுள்ளன. | |
| (ii) | 09 வலயங்களில் கடமையாற்றும் 96 ஆசிரியர்கள், அதிபர்கள், ஏனைய ஆளணி உத்தியோகத்தர்கள் தர பதவியுயர்வு பெறவேண்டிய காலங்களைக் கடந்தும் 01 இலிருந்து 20 வருட காலமாக தரப் பதவியுயர்வு வழங்கப்பட்டிருக்கவில்லை. | 2022.10.22 ஆம் திகதியின் பின்னர் வரும் ஆசிரியர்களுக்கான பதவியுயர்வுகளுக்கு தொழில் மீளாய்வு அவசியம் என ED/2/29/02/02/20 ஆம் இலக்க 2024.01.01 ஆம் திகதிய கடிதம் மூலமும் மற்றும் 50/2023 ஆம் இலக்க சுற்றுநிருபத்தினூடாகவும் கட்டாயமாக்கப்பட்டுள்ளதால் குறித்த திகதியின் பின்னரான பதவியுயர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. மேலும் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தியடையாத அதிபர் மற்றும் ஆசிரியர்களுக்கான பதவியுயர்வுகளும் வழங்கப்பட முடியாதுள்ளது. மேற்குறித்த காரணங்களால் பதவியுயர்வுகள் வழங்கப்பட முடியாதுள்ளன. குறித்த வகைக்குள் அடங்காத ஏனைய | உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | உத்தியோகத்தர்களுக்கான பதவியுயர்வுகள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | |
| (iii) | 30 பாடசாலைகளில் 69 எண்ணிக்கையான ஆசிரியர்கள் தமது பதவியுயர்வினை தாமதமாக பெற்றிருந்த போதும் அவர்களுக்கான நிலுவைச்சம்பளம் கணிப்பிடப்பட்டு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைச் சம்பளத்திற்கான கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டு அவற்றுக்கான ஒதுக்கீடு மற்றும் கட்டுநிதி கிடைக்கப்பெறும் காலங்களில் குறித்த நிலுவைச் சம்பளங்கள் வழங்கப்படும். | உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**4.10 பெறுகைகள்**

---------------------

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| | --------------------------------------------------- | ------------------------------ | ---------------- |
| (i) | நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் SBD/03 இன் பிரகாரம், விவசாயத் திணைக்களத்தில் காலநீடிப்புக்கள் வழங்கப்பட்டிருந்தும் உரிய காலத்தில் 04 எண்ணிக்கையான வேலைத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்காமைக்கான கால தாமத தண்ட அறவீடு ரூபா 189,813 ஒப்பந்ததாரிடமிருந்து அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | விவசாயத்திணைக்களத்தின் 04 வேலைகள் உரிய காலத்தில் நிறைவேற்றப்படாத நிலையில் காலதாமதத்திற்கான தண்ட அறவீடு தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | பெறுகை நடைமுறை பின்பற்றப்படல் வேண்டும். |
| (ii) | மாகாண சுகாதாரத் திணைக்களத்தின் 04 பிராந்திய பணிமனைகள், மாவட்ட அலுவலகங்களின் பெறுகைகள் தொடர்பான கணக்காய்வின் போது பெறுகைவழிகாட்டி பிரிவு 2.61, 5.3.10, 7.9.11, 7.10 போன்ற பெறுகை வழிகாட்டல்களுக்கு முரணாக பிற்தகைமை மதிப்பீடு, தகைமை மதிப்பீடு, விலைக்கேள்வி செல்லுபடிக் காலம், தொழிநுட்பக் குழு தனது கடமையை நிறைவேற்றாமை மற்றும் விளைதிறனான சேவையை பெறுதல் போன்றவற்றில் பெறுகை நடைமுறை இணக்கமின்மைகள் ஏற்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் தெரிவுசெய்யப்படும் கேள்விதாரர் தொடர்பான பிற்தகைமை மதிப்பீடு மேற்கொள்ளப்படும். | பெறுகை நடைமுறை பின்பற்றப்படல் வேண்டும். |